**அயகம பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் அயகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டண குறை ஒதுக்கீடு ரூபா 3,990,823 தொகைக்கான செம்மையாக்கல் செய்யப்படவில்லை. | முத்தரைக் கட்டண குறை ஒதுக்கீடு திரண்ட நிதியத்தினூடாக செம்மையாக்கல் செய்யப்பட வேண்டும். | முத்திரைக் கட்டண வருமானம் மதிப்பீட்டு வருமானமாக இனங்காணப்படுவதாகவும், குறை ஒதுக்கீட்டை இனங்கண்டு மீதியை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | செலுத்த வேண்டிய முற்பணத்திற்காக முத்திரைக் கட்டணத்திலிருந்து குறைக்கப்பட்டிருந்த ரூபா 1,900,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய வருமானம், செலவினம் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்களை தெளிவாக இனங்கண்டு நிதிக்கூற்று தயாரிக்க வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு செலவினம் ரூபா 130,409 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய செலவு சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 57,278 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டினுள் கொள்வனவு செய்யும் சகல நிலையான சொத்துக்களையும் மூலதனமாக்க வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு கட்டணம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரியதாக செலுத்த வேண்டிய செலவினத்திற்கான ஏற்பா்டு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | 11 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுகள் பிரகார மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடு பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 3,348,398 ஆன வித்தியாசம் நிலவியது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் பெறுமதிகள் உபயோகப் பதிவேடுகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (எ) | 2015 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவி வரும் கூட்டுத் தொகை ரூபா 1,079,017 ஆன 03 கணக்கு விடயங்களிற்கான போதிய சான்றுகள் காணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகளை உறுதி செய்யும் பதிவேடுகள் சமர்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும **முகாமைத்துவ** தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 05 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசோதிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 04 வாகனங்களில் எரி பொருள் பரிசோதனை செய்யப்படுவதாகவும், 04 டெக்டர்கள், பெகோ லோடர் மற்றும் மோடர் கிறேடரிற்கு எரி பொருள் நிரப்ப நிரப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கடினமாகையால் அவற்றின் எரி பொருள் பரிசோதனை மேற்கொள்வது கடினமானது என அறிவிக்கிறேன். |
| (ii) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | ஆளணியினரிற்காக வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு முதல் பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கை | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 பாதீடு தயாரிக்கும் போது சபைக்குரிய நிலைபேறான அபிவருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கிறேன். |
| (இ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய 2018/இ-உள்ளூராட்சி 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சேவைபெறுனர்களுக்கு தேவையான வசதிகளை வழங்க வேண்டும். | சபையின் இணயதளத்தினூடாக சேவைபெறுனர்களுக்கு தகவல்களை அறிந்துக்கொள்ளும் வசதி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய வசதிகளை அமைக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

--------------------

**2.1 நிதி விளைவுகள்**

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை விஞ்சிய செலவு ரூபா 1,972,118 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானங்களை விஞ்சிய செலவு ரூபா 1,772,039 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேர்க்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம | 2018 சேர்க்கப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 818,550 | 956,371 | 1,030,046 | 186,080 | 658,000 | 1,233,134 | 1,014,333 | 193,606 |
| (ii) | வாடகை | 5,741,320 | 6,015,289 | 6,563,855 | 130,587 | 6,221,170 | 4,656,723 | 4,512,532 | 147,376 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 361,390 | 318,027 | 270,077 | 1,000 | 286,410 | 321,511 | 264,971 | 3,950 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,209,350 | 6,042,022 | 10,935,102 | 3,997,693 | 3,849,450 | 5,057,487 | 6,368,402 | 7,040,838 |
| | | 12,130,610 | 13,331,709 | 18,799,080 | 4,315,360 | 11,015,030 | 11,268,855 | 12,160,238 | 7,385,770 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 155,752 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியினுள் 143 அலகுகளிலிருந்து 05 ஆண்டுகளை விஞ்ஞிய காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 98,170 உள்ளடங்கியிருந்தது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையயிலிருந்து ரூபா 1,961 இனை 2020 மே 31 வரை அறவிட்டிருப்பதாகவும், எஞ்சிய நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| **(ஆ) நீர் கட்டணம்** | | |
| நிலுவை நீர் கட்டணம் ரூபா 71,270 அறவிட வேண்டியதாக இருந்ததுடன், அவற்றில் ரூபா 63,025 தொகை 01 ஆண்டிற்கும் 03 அண்டுகளிற்கும் இடையிலான காலத்திற்கு உரியது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையயிலிருந்து ரூபா 35,700 இனை 2020 மே 31 வரை அறவிட்டிருப்பதாகவும், எஞ்சிய நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

2.2.3 **கடை வாடகை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அயகம வாராந்த சந்தையில் 12 கடையறைகளிலிருந்து முற்செலுத்தற் பணம் ரூபா 540,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானம் மற்றும் பிணை வைப்பை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முற்செலுத்தற் பணத்தை அறவிடுவதற்கு கடிதம் மூலமாக அறிவூட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

3 **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயலாற்றுகை**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி மற்றும் மக்களுக்கு வழங்கும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் தொடர்பான முன்மொழிவுகள் ஏதேனும் செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டினூடாக ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள அபிவிருத்தி முன்மொழிவுகள் செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்ததை தயாரிக்கும் போது அம் முன்மொழிவுகளை உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(ஆ) **எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்துக் கொள்ளாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2019 வருடாந்த பாதீட்டினூடாக 20 அபிவருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 22,465,000 ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்த போதும், அவற்றில் 16 கருத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், அதற்கு பதிலாக வேறு 23 கருத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. | வருடாந்த பாதீட்டு முன்மொழிவுகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதீட்டினூடாக அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்த போதும் ஆண்டினுள் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய செயற்பாடுகளுக்காக பணம் செலவிடப்பட வேண்டி ஏற்படுவதனால் திட்டமிடப்பட்ட அனைத்தையும் செயற்படுத்த முடியாமலிருந்தது என அறிவிக்கிறேன். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதி வரையும் முறையான கழிவுப் பொருள் முகாமை வேலை திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்த சபையினால் இயலாமலிருந்தது. | முறையான கழிவுப் பொருள் முகாமை வேலை திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். | உக்கலடையும் கழிவுப் பொருள் கலவான குப்பை வெளியிடும் இடத்திற்கு வெளியிடப்பட்டு மண் படையொன்றினால் மூடப்படுவதாகவும், உக்கலடையாத கழிவுபொருள் வேறுபடுத்தும் நிலையத்தில் வேறுபடுத்தல் மேற்கொள்வதாகவும் அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினுள் 10 பதிவிகளுக்கான 13 வெற்றிடங்கள் நிலவின. | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஆளணியின் வெற்றிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டும் இரத்தினபுரி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு தகவல்களை சமர்பிப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆண்டு முதல் ரூபா 2,400 ஆன மாதாந்த வாடகைக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான கடையறையொன்றை குத்தகைகாரியால் குத்தகை உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரனாக மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு ரூபா 12,000 ஆன மாதாந்த வாடகைக்கு உப குத்தகை வழங்கப்பட்டிருந்ததுடன், கடையறை வாடகையை 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பிட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உப குத்தகை வழங்குதல் தொடர்பாக உடன்படிக்கையின் நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஆதனங்களை மதிப்பீட்டு குத்தகை வாடகையை திருத்த வேண்டும். | உப குத்தகை வழங்கல் தொடர்பாக குத்தகை பெறுனரை அறிவூட்டியதாகவும் மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரிய போதும் இது வரை அது தொடர்பாக மதிப்பீடொன்று கிடைக்கவில்லை என அறிவிக்கிறேன். |